**நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1, உடுமலைப்பேட்டை.**

**முன்னிலை. திருமதி.T.நித்யகலா, பி.காம்., பி.எல்.,**

**நீதித்துறை நடுவர் எண்.1,**

**உடுமலைப்பேட்டை.**

2026 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 18 ஆம் நாள் புதன்கிழமை

(திருவள்ளுவராண்டு 2056, விசுவாவசு வருடம், பங்குனி திங்கள் 04 ஆம் நாள்)

**ஆண்டுப்பட்டிகை வழக்கு எண்.283/2022**

**CNR.No.TNTI17-001799-2022**

| | | |
|---|---|---|
| குற்றமுறையீட்டாளர் | – | அரசுக்காக, காவல் உதவி ஆய்வாளர், உடுமலைப்பேட்டை காவல் நிலையக் குற்ற எண். 222/2022 |
| //எதிர்// | | |
| எதிரிகள் | – | 1 ஆம் எதிரி பப்பீஸ்,<br>த/பெ. பாஸ்கரன்,<br>தெற்கு மாவட்ட செக்ரேட்டரி,<br>இந்து முன்னணி **(என்பவர் இறந்துவிட்டதால் அவர் மீதான குற்றச்சாட்டுக்கள் வழக்கற்று போய்விட்டதாக தீர்ப்பாகியுள்ளன.)**<br><br>2 வது எதிரி நவீன்குமார் (25/2022),<br>த/பெ. முருகேசன்,<br>4/115, ஆறுமுககவுண்டர் லே அவுட்,<br>எஸ். எஸ். காலணி,<br>உடுமலைப்பேட்டை தாலுக்கா,<br>திருப்பூர் மாவட்டம். |
| குற்றம் சாட்டப்பட்டது | – | எதிரிகள் மீது பிரிவுகள் 353, 341 இ.த.ச – வின் கீழ் |
| குற்றச்சாட்டு வனையப்பட்டது | – | எதிரிகள் மீது பிரிவுகள் 353, 341 இ.த.ச – வின் கீழ் |
| தீர்மானம் | – | முடிவாக அரசு தரப்பில் எதிரிகள் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்களான இந்திய தண்டனை சட்டம் 1860, பிரிவுகள் 353, 341–ன் கீழ் குற்றவாளிகள் அல்ல என தீர்மானித்து எதிரிகளை குற்றவியல் நடைமுறை தொகுப்பு சட்டம் 1973, பிரிவு 248(1)–ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது. |
| புகார் நாள் | – | 22.04.2022 |

| | | |
|---|---|---|
| எதிரிகள் கைது செய்யப்பட்ட நாள் | – | A1 – Charge Abated<br>A2 – 23.11.2022 |
| எதிரிகள் பிணையில் சென்ற நாள் | – | A2 – 23.01.2022 ஆம் தேதியன்று காவல் நிலைய பிணையில் சென்றுள்ளார். |
| கோப்பு நாள் | – | 12.12.2022 |
| விசாரணை தொடங்கப்பட்ட நாள் | – | 24.04.2023 |
| விசாரணை முடிக்கப்பட்ட நாள் | – | 09.03.2026 |
| தீர்ப்புரை நாள் | – | 18.03.2026 |

இவ்வழக்கானது 12.12.2022 ஆம் தேதியன்று இந்நீதிமன்றத்தால் கோப்புக்கு எடுக்கப்பட்டு அரசு தரப்பில் அரசு குற்றத்துறை உதவி வழக்குரைஞர் நிலை–2 அவர்கள் முன்னிலையாகியும், எதிரிகள் தரப்பில் வழக்குரைஞர் திரு.C.சிதம்பரசாமி, B.A., B.L., அவர்கள் முன்னிலையாகியும், இவ்வழக்கின் சாட்சியங்களையும், சான்றாவணங்களையும் பரிசீலனை செய்தும், முன்வைக்கப்பட்ட இருதரப்பு வாதுரைகளும் கேட்டறிந்தும், இது நாள் வரையில் இந்நீதிமன்றத்தில் விசாரணையில் இருந்து வந்த இவ்வழக்கில் இன்று இந்நீதிமன்றம் ஆய்ந்தளிக்கும்,

**தீர்ப்புரை**

எதிரிகள் மீது உடுமலைப்பேட்டை காவல் நிலைய காவல் உதவி ஆய்வாளர் குற்ற எண்.222/2022 ல் தாக்கல் செய்துள்ள குற்ற அறிக்கையின் சுருக்கம் பின்வருமாறு :

1) கடந்த 21.04.2022 ஆம் தேதி 21.30 மணிக்கு உடுமலை – பொள்ளாச்சி ரோடு மாரியம்மன் கோவில் தேர்நிலை அருகில் வாதி சரவணகுமார் உதவி ஆய்வாளர் மற்றும் சாட்சிகள் 2 முதல் 4 வரையானவர்களுடன் உடுமலைப்பேட்டை மாரியம்மன் கோவில் தேர்திருவிழ ஊர்வலத்தின் போது பொள்ளாச்சி ரோடு சந்திப்பு கொல்லம்பட்டறை அருகே தேர் வந்து

கொண்டிருந்தபோது எதிரிகள் பப்பீஸ் த/பெ பாஸ்கரன் மற்றும் நவீன்குமார் த/பெ. முருகேசன் ஆகிய இருவரும் சேர்ந்து தேர் இழுப்பது இந்து முன்னனியில் உள்ளவர்களாகிய எங்களுக்கே முன்னுரிமை உள்ளது என்று கூறியும் தேர் இழுத்து வரும் பக்தர்களிடம் பிரச்சனை செய்து வாதியுடன் தள்ளுமுள்ளு செய்துள்ளதாகவும், அதைத் தொடர்ந்து மீண்டும் உடுமலை – பொள்ளாச்சி ரோட்டில் மாரியம்மன் கோயில் தேர்நிலை அருகே தேர் வந்த போது மீண்டும் பக்தர்களிடம் பிரச்சனை செய்தும் பெரியவர்கள் பெண்கள் குழந்தைகள் ஆகியோர்களுக்கு இடையூறு ஏற்படும் விதமாக நடந்து கெண்டும் ஏற்கனவே தள்ளு முள்ளு சம்பவத்தை காரணமாக வைத்து கொண்டு எதிரிகள் மீண்டும் வாதியும் உதவி ஆய்வாளருமான சரவணக்குமார் என்பவரையும் திருவிழா பாதுகாப்பஹ அலுவலில் இருந்த மற்ற போலிசாரையும் பாதுகாப்பு செய்யும் அலுவலை செய்ய விடாமல் தடுத்த குற்றத்திற்காகவும், எதிகள் மேற்படி ரோட்டில் பொதுமக்களுக்கும் போக்குவரத்திற்கும் இடையூறாக நின்று கொண்டும் வாகனங்கள் செல்ல விடாமல் வழி மறித்தும் எந்த வண்டியையும் போக விடமாட்டேன் என கூற குறுக்காட்டிய குற்றத்திற்காகவும், எதிரிகள் மீது உடுமலை காவல் நிலைய காவல் உதவி ஆய்வாளர் அவர்களால் இந்திய தண்டனை சட்டம் 1860 சட்டப்பிரிவுகள் 353, 341– ன் படி குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) அழைப்பாணையின் பெயரில் இவ்வழக்கின் எதிரிகள் நீதிமன்றத்தில் முன்னிலையானபோது எதிரிகளுக்கு வழக்கு தொடர்பான ஆவண நகல்கள் அனைத்தும் குற்றவியல் நடைமுறை தொகுப்பு சட்டம் 1973 பிரிவு 207–ன் கீழ் இலவசமாக வழங்கப்பட்டு, போதிய கால அவகாசத்திற்கு பின்னர் எதிரிகள் மீது இந்திய தண்டனை சட்டம் 1860, பிரிவுகள் 353, 341–ன் கீழான குற்றத்திற்கான முதல் நோக்கு முகாந்தரம் இருப்பதாக நீதிமன்றம் திருப்தியுற்றதால் குற்றவியல் நடைமுறை தொகுப்பு சட்டம் 1973 பிரிவு 240–ன் கீழ் குற்றச்சாட்டு வனைந்து தமிழில் படித்துக்காட்டி விளக்கம் கேட்டபோது இவ்வழக்கின் எதிரிகள்

குற்றச்சாட்டுக்களை மறுத்து தாங்கள் குற்றவாளிகள் அல்ல என தெரிவித்தார்கள். மேலும் தங்கள் மீது போடப்பட்ட வழக்கை விசாரணைக்கு உட்படுத்த வேண்டினார்கள். எனவே அரசு தரப்பு சாட்சிகள் விசாரணை செய்ய அரசு தரப்பில் வழிவகை செய்யப்பட்டது.

3) எதிரிகள் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்களை நிரூபணம் செய்வதற்காக அரசு தரப்பில் 08 சாட்சிகள் காண்பிக்கப்பட்டு 07 சாட்சிகள் விசாரிக்கப்பட்டு சான்றாவணங்கள் அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.4 வரை குறியீடு செய்யப்பட்டுள்ளது.

<u>அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சிய சுருக்கம்</u>:

4) இவ்வழக்கின் புகார்தாரரான அ.சா.1 சரவணகுமார் என்பவர் உடுமலை காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறார். கடந்த 21.04.2022ம் தேதி உடுமலை மாரியம்மன் கோயில் தேர் திருவிழா பாதுகாப்பு பணியில் அ.சா.1, தலைமைக்காவலர் திரு.சேகர், முதல் நிலைக்காவலர் கோவிந்தராஜ், பத்ரா ஆகியோர் பணியில் இருந்தபோது பப்பிஸ் மற்றும் நவீன் ஆகியோர் தேர் பவனி வரும்போது அதற்கு இடையூறாகவும் போக்குவரத்துக்கும், பொதுமக்களுக்கம் இடையூறு ஏற்படும் வண்ணம் நடந்து கொண்டதால் மேற்படி தேர் திருவிழாவின் போது தேர் நிலைக்கு வருவதற்கு இடையூறு ஏற்படுத்தி ரகளை ஏற்படுத்தியதால் மேற்படி நபர்கள் மீது நடைவடிக்கை எடுக்குமாறு கூறி பாதுகாப்பு அலுவல் முடித்து கடந்த 22.04.2022ஆம் தேதியன்று அதிகாலை 2.15 மணிக்கு தணி அறிக்கை ஒன்று உடுமலை காவல் நிலையத்தில் அளித்துள்ளார். தணி அறிக்கையில் உள்ள கையெழுத்து அ.சா.1 உடையதுதான், அந்த தணி அறிக்கை அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

5) அ.சா.2 ஆன சேகர் என்பவர் உடுமலை காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வந்த போது கடந்த 21.04.2022ம் தேதி உடுமலை மாரியம்மன் கோவில் தேரோட்ட பாதுகாப்பு அலுவலாக அ.சா2ம், அவருடன் உதவி ஆய்வாளர் சரவணகுமார், முதல் நிலை காவலர் கோவிந்தராஜ் மற்றும்

பத்ரா ஆகியோர்கள் தேர் திருவிழாவிற்காக தேருக்கு முன்பு பாதுகாப்பு அலுவலில் இருந்த போது தேர் உடுமலை தளி ரோட்டு வழியாக சக்தி விநாயகர் கோவில், நாடார் மண்டபம், தலைகொண்டம்மன் கோவில் வழியாக சுற்றி வந்து உடுமலை – பொள்ளாச்சி ரோடு அருகே வந்த போது இந்து முன்னனி திருப்பூர் தெற்கு மாவட்ட செயலாளர் பப்பீஸ் அவருடன் உடுமலை தெற்கு ஒன்றிய செயலாளர் நவீன் இருவரும் இரவு சுமார் 09.30 மணிக்கு தேருக்கு முன்னாடி வந்து இந்து முன்னனியினருக்கு தான் முதல் மரியாதை நாங்கள் தான் தேர் இழுப்போம் என்று சொல்லி தகராறு செய்து கொண்டு உடுமலை – பொள்ளாச்சி ரோட்டில் தலைகொண்டம்மன் கோவில் முன்பு உட்கார்ந்து கொண்டார்கள் என்றும், பொது மக்களையும், தேரையும் நகரவிடாமல் தடுத்தார்கள் என்றும், அ.சா.2 ம், அங்கு அலுவலில் இருந்த உதவி ஆய்வாளரும் சமாதானம் செய்து எதிரிகளை அனுப்பி வைத்தோம் என்றும் கூறியுள்ளார்.

6) பின்னர் இரவு 09.50 மணிக்கு தேர் நிலைக்கு வந்த போது முன்பு நடந்த பிரச்சனையை மனதில் வைத்துக் கொண்டு பப்பீஸ் மற்றும் நவீன் ஆகிய இருவரும் தகராறு செய்து ரோட்டில் உட்கார்ந்து போக்குவரத்துக்கும், பொது மக்களுக்கும் இடையூறாகவும், அவர்களை பணி செய்யவிடாமலும் இடையூறு செய்தார்கள் என்றும், பப்பீஸ் இறந்து விட்டதாக கேள்விப்பட்டார், எதிரி நவீன் நீதிமன்றத்தில் ஆஜராகியுள்ளார், அவர் ஆஜர் எதிரி தான், இது சம்மந்தமாக உதவி ஆய்வாளர் சரவணகுமார் தனியறிக்கை தயார் செய்து வழக்கு பதிவு செய்தார் என்றும் கூறியுள்ளார்.

7) அ.சா.3 கோவிந்தராஜ் என்பவர் உடுமலை காவல் நிலையத்தில் முதல் நிலை காவலராக உள்ளார். இந்த வழக்கின் போது உடுமலை காவல் நிலையத்தில் முதல் நிலை காவலராக பணிபுரிந்து வந்தபோது, கடந்த 21.04.2022 ம் தேதி மாலை 04.00 மணிக்கு உடுமலை மாரியம்மன் கோவில் தேர் திருவிழாவிற்கு பாதுகாப்பு அலுவலுக்காக உதவி ஆய்வாளர் திரு.சரவணக்குமார் மற்றும் அ.சா.3 உடன் தலைமை காவலர் சேகர் மற்றும் முதல் நிலை காவலர்

பத்ரா ஆகியோர்கள் பணியில் இருந்த போது தேரானது தளி ரோடு வழியாக நாடார் கல்யாண மண்டபம், தலை கொண்டம்மன் கோவில் வழியாக தேருக்கு முன்புறம் பாதுகாப்பு அலுவலில் இருந்த போது அப்போது இரவு சுமார் 09.30 மணியளவில் இந்து முன்னனி தெற்கு மாவட்ட செயலாளர் பப்பிஸ் மற்றும் உடுமலை தெற்கு மாவட்ட செயலாளர் நவீன் ஆகியோர்கள் தேர் வடம் இழுப்பது முதல் உரிமை இந்து முன்னனியினருக்கே என்று சொல்ல அங்கிருந்த பக்தர்களுக்கும், இந்து முன்னனியினருக்கும் இடையே வாக்குவாதம் ஏற்பட்டுள்ளது.

8) பின்னர் உடனே உதவி ஆய்வாளர் சரவணக்குமார் மற்றும் அவர்களுடன் பணியில் இருந்த காவலர்கள் அவர்களை சமாதானம் செய்து வைத்துள்ளார்கள். பின்பு இரவு சுமார் 09.50 மணியளவில் உடுமலை – பொள்ளாச்சி ரோடு மாரியம்மன் தேர் நிலை அருகே ஏற்கனவே நடைபெற்ற தள்ளு முள்ளு பிரச்சனை தொடர்பாக சாலையில் அமர்ந்து வாகனங்களை விடமாட்டோம் என்று கூறி போக்குவரத்திற்கும், பொது மக்களுக்கும் எதிரிகள் பப்பீஸ் மற்றும் ஆஜர் எதிரி நவீன் இடையூறு ஏற்படுத்தியுள்ளார்கள். காவலர்களை பணி செய்ய விடாமல் போக்குவரத்திற்கும், பொது மக்களுக்கும் இடைஞ்சல் ஏற்படுத்தியுள்ளார்கள். உதவி ஆய்வாளர் அவர் தனியறிக்கை மூலம் வழக்கு பதிவு செய்துள்ளார்.

9) அ.சா.4 M. சம்பத்குமார் என்பவர் உடுமலைப்பேட்டை காவல் நிலையத்தில் உதவியாளராக பணிபுரிந்து வருகிறார். கடந்த 22.04.2022 ம் தேதி அதிகாலை 2.15 மணிக்கு நிலைய அலுவலில் இருந்த போது உடுமலை காவல் நிலையம் உதவி ஆய்வாளர் சரவணக்குமார் என்பவர் கொடுத்த தனியறிக்கை பெற்று புகாரின் தன்மைக்கேற்ப உடுமலை காவல் நிலைய குற்ற எண்.222/2022 ச/பி. 353, 341 இ.த.ச.–வின் கீழ் வழக்கு பதிவு செய்தும், முதல் தகவல் அறிக்கையும் தனியறிக்கை அசலையும் வைத்து நீதிமன்றத்திற்கு அனுப்பியும் இதர நகல்களை சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிக்கு அனுப்பியும், மேற்படி இன்னொரு நகலை உடுமலைப்பேட்டை காவல் நிலைய ஆய்வாளர்

ராஜேஷ்கண்ணன் அவர்களின் பார்வைக்கு மேல் விசாரணைக்கு வைத்துள்ளார். முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

10) அ.சா.5 பத்ரா என்பவர் உடுமலை காவல் நிலையத்தில் முதல் நிலை காவலரக பணியில் இருந்த போது கடந்த 21.04.2022ம் தேதியன்று உடுமலை மாரியம்மன் கோவில் தேர் திருவிழா நடைபெற்றுள்ளது. தேர் திருவிழாவின் போது தேர்த்திருவிழா பாதுகாப்பு பணியில் உதவி ஆய்வளார் சரவணக்குமார் தலைமை காவலர்சேகர், முதல் நிலை காவலர் கோவிந்தராஜ் ஆகியோருடன் பணியில் இருந்தபோது தேரானது தளி ரோடு, சித்தி விநாயகர் கோவில் தலைகொண்டம்மன் கோவில் வழியாக சென்ற போது பாதுகாப்பு பணியில் இருந்துள்ளார்கள். அப்போது பொள்ளாச்சி ரோடு கொல்லம்பட்டறை அருகே தேர் வந்த போது இந்து முன்னணி சேர்ந்த மாவட்ட செயலாளர் பப்பீஸ், தெற்கு ஒன்றிய செயலாளர் நவீன் ஆகியோர் இந்து முன்னணியினர் தான் தேரை இழுக்க வேண்டும், அவர்களுக்கு தான் உரிமை உள்ளது என்று கூறினார்கள் என்றும், அதற்கு பக்தர்களும் சத்தம்போட அங்கிருந்து சென்று விட்டனர் என்றும் கூறியுள்ளார்.

11) மேலும் தேர் இரவு 9.50 மணிக்கு நிலை நிறுத்த வந்த போது பப்பீஸ் மற்றும் நவின் என்பவர்கள் இடையூறாக நின்று கொண்டு பிரச்சனை செய்ததுள்ளார்கள். அதை கேட்ட வந்த உதவி ஆய்வாளரை பணி செய்ய விடாமல் பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு இடையூறாக இருந்தார்கள், இது சம்பந்தமாக உதவி ஆய்வாளர் சரவணகுமார் பாதுகாப்பு அலுவல் முடித்து சென்று தனி அறிக்கையாக புகார் கொடுத்துள்ளார் என்றும், சம்பத்குமார் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து காவல் ஆய்வாளர் வசம் ஒப்புவித்தார் என்றும் கூறியுள்ளார்.

12) அ.சா.6 வேல் முருகன் என்பவர் கடந்த 22.04.2022ம் தேதி காலையில் அ.சா.6ன் கடையில் உள்ள பொருட்களை வெளியே எடுத்த வைத்த போது

முதல் நாள் மாரியம்மன் கோவில் தேர் திருவிழாவின் போது ஏற்பட்ட பிரச்சனையின் காரணமாக உதவி ஆய்வாளர் சரவணக்குமார் அங்கு வந்து விசாரித்ததாகவும், வரைபடம் வரைந்ததற்காக தன்னிடம் கையொப்பம் கேட்டதாகவும், அ.சா.6 ம், அவரது சித்தப்பா குமாரும் கையொப்பம் செய்துள்ளார்கள். பார்வை மகசரில் உள்ள 2 வது கையெழுத்து அ.சா.6 உடையது தான். பார்வை மகசர் அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

13) அ.சா.7 ராஜேஷ்கண்ணன் என்பவர் உடுமலை காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணியில் இருந்த போது அ.சா.3 உதவி ஆய்வாளர் சம்பத்குமார் என்பவர் பதிவு செய்த வழக்கை புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு காலை 7.00 மணயளவில் சம்பவ இடம் சென்று குமார் மற்றும் வேல்முருகன் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு மாதிரி வரைபடமும், பார்வை மகசரும் தயார் செய்து சாட்சி கையொப்பம் பெற்று வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். மாதிரி வரைபடம் அ.சா.ஆ.4 ஆகவும், பார்வை மகசர் அ.சா.ஆ.5 ஆகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

14) பின்னர் சாட்சிகள் சரவணகுமார் உதவி ஆய்வாளர், தலைமை காவலர் சேகர், முதல் நிலை காவலர் கோவிந்தராஜ், முதல் நிலைக் காவலர் பத்ரா ஆகியோரை தனித்தனியாக விசாரித்து வாக்கு மூலம் பதிவு செய்துள்ளார். பின்பு வழக்கில் சம்பந்தப்பட்ட எதிரிகளை தேடி புலன் வைத்த போது முதலாவது எதிரி பப்பிஸ் என்பவர் வாகன விபத்தில் அடிபட்டு 03.11.2022 ம் தேதி இறந்து விட்டதால் அவரது பிரேத பரிசோதனை சான்று பெற்றுள்ளார். பிரேத பரிசோதனை சான்று அ.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

15) பின்னர் மற்றொரு எதிரியான நவீன் என்கின்ற நவீன் குமாரை 23.11.2022 ஆம் தேதி உடுமலை எஸ்.எஸ். காலனி பஸ் நிறுத்தம் அருகில் கைது செய்து திரேக பரிசோதனைக்கு பின் தக்க இரு நபர் ஜாமினில் விடுவித்துள்ளார். பின்னர் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த உதவி ஆய்வாளர் சம்பத்குமார் என்பவரை விசாரித்து வழக்கின் புலன் விசாரணை

முடித்து எதிரியின் மீது குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

16) அரசு தரப்பில் விசாரிக்கப்பட்டுள்ள சாட்சிகளின் சாட்சியங்களில் இருந்து எதிரிகளுக்கு பாதகமானவற்றை எதிரிகளிடம் குற்றவியல் நடைமுறை தொகுப்பு 1973, பிரிவு 313(1) (ஆ) – ன் கீழ் விளக்கி விசாரணை செய்தபோது எதிரிகள் தங்களுக்கு எதிரான அரசு தரப்பு சாட்சியங்களை மறுத்துரைத்தார்கள். மேலும் தாங்கள் நிரபராதி எனவும், தங்களது தரப்பில் விசாரிக்க சாட்சிகள் உண்டு என்று கூறினார்கள். எனினும் எதிரிகள் தரப்பில் சாட்சிகளை விசாரணைக்கு உட்படுத்தவில்லை.

17) கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞர் தமது வாதுரையில், இவ்வழக்கில் அரசுத்தரப்பில் விசாரிக்கப்பட்ட வாய்மொழிச் சான்றுகள் மற்றும் ஆவணச்சான்றுகள் வாயிலாக எதிரிகள் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளை அரசுத்தரப்பில் சந்தேகத்திற்கப்பால் நிரூபணம் செய்து விட்டதாகவும், அதனால் எதிரிகளுக்கு அதிகபட்ச தண்டனை வழங்கவேண்டுமென்று வாதிட்டார்.

18) கற்றறிந்த எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் தனது வாதுரையில், போக்குவரத்திற்கும் பொது மக்களுக்கும் இடையூறு ஏற்படுத்தியதாக குறிப்பிட்டுள்ள நிலையில் குறிப்பிட்டு வாகன ஓட்டிகள் யாரேனும், பொதுமக்கள் யாரேனும் புகார் எதுவும் கொடுக்கவில்லை என்றும், அ.சா.1 ஆனவர் கொடுத்த தனியறிக்கையில் எந்த இரு சக்கர வாகனங்களுக்கு இடையூறு ஏற்பட்டது என்பதைக் காட்ட வாகனத்தின் பதிவு எண்ணையோ பொதுமக்களில் யாருக்கு மேற்படி எதிரி இடையூறு ஏற்படுத்தினார் என்பதைக் காட்ட அவர்கள் முகவரியையோ தணியறிக்கையில் குறிப்பிடவில்லை என்றும், புள்ளி விவர கணக்கிற்காக 2 ஆம் எதிரி மீது பொய்யாக இந்த புகார் கொடுக்கப்பட்டுள்ளது என்றும், ஆஜர் எதிரி இந்து முன்னனியில் இருந்தார் என்பதற்கு எந்த ஆவணமும் கைப்பற்றவில்லை என்றும், தேர் திருவிழாவின் போது பக்தர்கள், பெண்கள் குழந்தைகள் எதிரிகள் இடையூறு ஏற்படுத்தியதாக எதிரிகள் மீது

யாரும் புகார் தரவில்லை என்றும், அ.சா.6 ஆன பார்வை மகசர் சாட்சியானவர் தனது குறுக்கு விசாரணையில் போலிசார் கேட்டுக் கொண்டதற்கு இணங்க வெற்று தாளில் கையொப்பம் செய்ததாக முரண்பட்டு கூறியுள்ளார் என்றும், பார்வை மகசரில் யார் சம்பவ இடத்தை அடையாளம் காட்டினார்கள் என்று குறிப்பிடவில்லை என்றும், எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றும் எதிரி தான் இவ்வழக்கு குற்ற சம்பவத்தில் ஈடுபட்டார் என்பதை அரசு தரப்பில் நிரூபிக்காததால் எதிரியை இவ்வழக்கில் இருந்து சட்டத்திற்குட்பட்டு விடுதலை செய்ய வேண்டும் என்று வாதிட்டார்.

**<u>பிரச்சனையும் தீர்வும்</u>**

19) இருதரப்பிலும் கேட்கப்பட்டும் ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டும் இவ்வழக்கின் எதிரிகள் மீது சுமத்தப்பட்ட இந்திய தண்டனைச் சட்டம் 1860, பிரிவுகள் 353, 341–ன் கீழான குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்பட்டுள்ளதா என்பதை பரிசீலிக்க வேண்டியது இந்நீதிமன்றத்தின் கடமையாகும்.

20) இவ்வழக்கில் சம்பவ தேதி, சம்பவ நேரம் மற்றும் சம்பவ இடத்தைப் பொறுத்து அ.சா.ஆ.1. ஆன புகாரைப் பரிசீலிக்கையில், கடந்த 21.04.2022 ஆம் தேதி உடுமலை பொள்ளாச்சி சந்திப்பு கொல்லம்பட்டறை அருகே இரவு சுமார் 09.30 மணிக்கு வந்து கொண்டிருந்தபோது மற்றும் பின்னிட்டு மீண்டும் உடுமலை – பொள்ளாச்சி ரோட்டில் மாரியம்மன் கோவில் தேர் நிலை அருகே இரவு சுமார் 09.50 மணிக்கு இவ்வழக்கு சம்பவம் நடந்ததாக குறிப்பிடப்பட்டு அவ்வாறே அ.சா.ஆ.2 ஆன முதல் தகவல் அறிக்கையும் பதிவு செய்யப்பட்டுள்ளது.

21) மேலும், அ.சா.1 ஆனவர் அவரது முதன்மை சாட்சியத்தில் கடந்த 21.04.2022 ம் தேதி உடுமலை மாரியம்மன் கோயில் தேர் திருவிழா பாதுகாப்பு பணியில் இருந்தபோது தேர் பவனி வரும் போது இவ்வழக்கு சம்பவம் நடந்ததாக சொல்லியுள்ளார். மேலும் கண்ணுற்ற சாட்சிகள் அ.சா.2 தனது சாட்சியத்தில் கடந்த 21.04.2022 ம் தேதி உடுமலை மாரியம்மன் கோவில் தேரோட்ட பாதுகாப்பு

அலுவலாக இருந்ததாகவும், உடுமலை – பொள்ளாச்சி ரோடு அருகே சுமார் 09.30 மணிக்கு தேர் வந்த போதும் மற்றும் உடுமலை – பொள்ளாச்சி ரோட்டில் தலைகொண்டம்மன் கோவிலில் 09.50 மணிக்கு தேர் நிலைக்கு வந்தபோதும் எதிரிகள் பிரச்சனை செய்ததாக கூறியுள்ளார். மேலும் மற்றொரு கண்ணுற்ற சாட்சியான அ.சா.3 ஆனவர் கடந்த 21.04.2022 ஆம் தேதி தேரானது தளி ரோடு வழியாக நாடார் கல்யாண மண்டபம், தலை கொண்டம்மன் கோவில் வழியாக தேருக்கு முன்புறம் பாதுகாப்பு அலுவலில் இருந்த போது அப்போது இரவு சுமார் 09.30 மணியளவில் வந்தபோதும், பின்பு இரவு சுமார் 09.50 மணியளவில் உடுமலை – பொள்ளாச்சி ரோடு மாரியம்மன் தேர் நிலை அருகேயும் எதிரிகள் பிரச்சனை செய்ததாக கூறியுள்ளார். மேலும் அ.சா.5 பத்ரா என்பவரும் கடந்த 21.04.2022 ஆம் தேதி பொள்ளாச்சி ரோடு கொல்லம்பட்டறை அருகே தேர் வந்த போதும் மற்றும் தேர் இரவு 9.50 மணிக்கு நிலை நிறுத்த வந்த போதும் எதிரிகள் பிரச்சனை செய்ததாக கூறியுள்ளார்.

22) மேலும் மேற்படி சாட்சிகளின் குறுக்கு விசாரணையில் அ.சா.1 ஆனவர் தேர் எப்போது கிளம்பி நிலைக்கு வந்தது என்றால் மாலை 04.15 மணிக்கு புறப்பட்டு இரவு 09.50 மணிக்கு நிலைக்கு வந்தது என்றும், அ.சா.2 ஆனவர் தேரானது மாலை 04.00 மணிக்கு கிளம்பியது என்றும் இரவு சுமார் 09.50 மணிக்கு நிலைக்கு வந்தது என்றும், அ.சா.3 ஆனவர் தளி ரோடு, நாடார் மண்டபம் தலை கொண்டம்மன் கோவில் என்று சொல்லியுள்ள நிலையில் அங்கு எப்போது தேர் வந்தது என்றால் சரியாக எப்போது வந்தது என்று நேரத்தை கணக்கெடுக்கவில்லை என்றும் கூறியுள்ளார்கள். எனவே மேற்படி சாட்சிகளிடம் எதிரி தரப்பில் சம்பவ நேரம், தேதி மற்றும் இடத்தைப் பொறுத்து மறுத்து குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.

23) மேலும், இவ்வழக்கின் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த அ.சா.4 ஆனவர் தனது முதன்மை விசாரணையில் கடந்த 22.04.2022ம் தேதி அதிகாலை 2.15 மணிக்கு நிலைய அலுவலில் இருந்த போது உடுமலை காவல்

நிலையம் உதவி ஆய்வாளர் சரவணக்குமார் என்பவர் கொடுத்த அ.சா.ஆ.1 ஆன தனியறிக்கை பெற்று உடுமலை காவல் நிலைய குற்ற எண்.222/2022 ச/பி. 353, 341 இ.த.ச.–வின் கீழ் அ.சா.ஆ.2 ஆன முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து நீதிமன்றத்திற்கும், உடுமலைப்பேட்டை காவல் நிலைய ஆய்வாளர் ராஜேஷ்கண்ணன் அவர்களின் பார்வைக்கு மேல் விசாரணைக்கு வைத்ததாகவும் கூறியுள்ளார்.

24) மேலும் புலன் விசாரணை அதிகாரியான அ.சா.7 ஆனவர் மேற்படி வழக்கை புலன் விசாரணைக்கு எடுத்து கொண்டு காலை 7.00 மணியளவில் சம்பவ இடம் சென்று குமார் மற்றும் வேல்முருகன் ஆகியோர்கள் முன்னிலையில் அ.சா.ஆ.4 ஆன மாதிரி வரைபடமும், அ.சா.ஆ.5 ஆன பார்வை மகசரும் தயார் செய்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார்.

25) இந்நிலையில், பார்வை மகசர் சாட்சியாக விசாரிக்கப்பட்ட அ.சா.6 முருகன் என்பவரது சாட்சியத்தில் கடந்த 22.04.2022 ம் தேதி காலையில் முதல் நாள் மாரியம்மன் கோவில் தேர் திருவிழாவின் போது ஏற்பட்ட பிரச்சனையின் காரணமாக உதவி ஆய்வாளர் சரவணக்குமார் அங்கு வந்து விசாரித்ததாகவும், வரைபடம் வரைந்ததற்காக தன்னிடம் கையொப்பம் கேட்டதாகவும், தானும், தனது சித்தப்பா குமாரும் கையொப்பம் செய்ததாகவும், அ.சா.7 புலன் விசாரணை அதிகாரியின் சாட்சியத்திற்கு ஒத்துப் போகும் வகையில் சாட்சியம் அளித்துள்ள நிலையில் அ.சா.6 ன் குறுக்கு விசாரணையில் கையெழுத்து போட்ட ஆவணத்தில் உள்ள விவரம் தெரியாது என்றால் ஆமாம் என்றும், போலிசார் கேட்டுக் கொண்டதற்கு இணங்க வெற்று தாளில் கையொப்பம் செய்தீர்கள் என்றால் ஆமாம் என்று தனது முதல் விசாரணைக்கும் புலன் விசாரணை அதிகாரியின் சாட்சியத்திற்கும் முரண்பட்டு கூறியுள்ளார். இருப்பினும் பார்வை மகசர் சாட்சியின் முரண்பட்ட சாட்சியத்தினாலேயே இவ்வழக்கை முற்றிலும் நிராகரிப்பது நீதியின் நலனுக்கு உகந்தது அல்ல என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

26) மேலும் எதிரி தரப்பில் புகாரானது 5 மணி நேரம் காலதாமதமாக கொடுக்கப்பட்டுள்ளது என்றும், முதல் தகவல் அறிக்கை 22.04.2022 ஆம் தேதி சம்பவம் நடந்ததாக சொல்லப்பட்ட முதல் தகவல் அறிக்கையில் 17.05.2022 ஆம் தேதி தான் நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது என்றும் மேற்படி காலதாமதத்திற்கு காரணம் குறிப்பிடவில்லை என்றும் முன்மொழியப்பட்டுள்ள நிலையில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த அ.சா.4 ஆனவர் அவரது குறுக்கு விசாரணையில் ரோந்து அலுவலை முடித்து நிலையம் வந்து புகார் கொடுக்கப்பட்டுள்ளது என்றும், அன்றைய தினமே காவல் ஆய்வாளர் வசம் ஒப்படைத்துவிட்டேன் என்றும் கூறியுள்ளார்.

27) மேலுல் புலன் விசாரணை அதிகாரியின் குறுக்கு விசாரணையில் உதவி ஆய்வாளர் சம்பத்குமார் வழக்கு கோப்பை எத்தனை மணிக்கு உங்களிடம் சமர்ப்பித்தார் என்றால் காலை 06.00 மணிக்கு என்றும், புகாரானது 5 மணி நேரம் காலதாமதம் என்றால் சரிதான் என்றும், சரணவக்குமார் இரவு பணியில் இருந்ததால் பணி முடித்துவிட்டு வந்து கொடுத்தார் என்றும், முதல் தகவல் அறிக்கை 22.04.2022 ஆம் தேதி பதிவு செய்து 17.05.2022 ஆம் தேதி நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது என்றாலும் காலதாமதம் காரணம் குறித்து விசாரிக்கவில்லை என்றால் சரிதான் என்றும் கூறியுள்ளார். மேற்படி முதல் தகவல் அறிக்கை காலதாமதமாக அனுப்பட்டதற்கான காரணம் குறிப்பிடப்படவில்லை என்பது தெரியவருகிற நிலையில் மேற்படி காலதாமதம் எதிரிக்கு எவ்வகையில் பாதிப்பை ஏற்படுத்தியது என்பது குறித்து விளக்கவில்லை.

28) இதனைப் பொறுத்து மாண்புமிகு உச்சநீதிமன்றம் யோகேஷ்சிங் வெர்சஸ் மகபீர்சிங் அன்ட் அதர்ஸ், 2017 SAR (Cr)212 என்ற வழக்கில்

> "When there is positive evidence to the fact that the FIR was recorded without unreasonable delay and investigation stated on the basis of that FIR and there is no informatory brought to the notice of the court, then in the absence of any prejudice to the accused it

cannot be concluded that the evidence was dined and the persecution story render and supportable"

என்று கூறியுள்ளதையும் இந்நீதிமன்றம் கருத்தில் கொள்கிறது.

29) இந்நிலையில் சம்பவ இடம், தேதி மற்றும் நேரத்தைப் பொறுத்து அ.சா.1 முதல் அ.சா.3, அ.சா.5 வரையானவர்களின் சாட்சியம் இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரியான அ.சா.7 ஆனவரின் சாட்சியமும் ஒன்றுக்கொன்று ஒத்துப்போகும் வகையில் அமைந்துள்ளதும், மேற்படி சாட்சிகளிடம் சம்பவ இடம், தேதி மற்றும் நேரத்தைப் பொறுத்து மறுத்து குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை என்பது தெரியவருகிறது. எனவே, சம்பவ இடம், தேதி, நேரத்தைப் பொறுத்து அரசு தரப்பானது சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபித்துவிட்டதாக இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

30) மேலும் இவ்வழக்கில் எதிரிகளின் அடையாளங்களைப் பொறுத்துப் பரிசீலிக்கையில் அ.சா.ஆ.1 ஆன தனியறிக்கையில் இந்து முன்னணி தெற்கு மாவட்ட செயலாளர் பப்பீஸ், உடுமலை தெற்கு ஒன்றிய செயலாளர் நவீன் மற்றும் சிலர் பிரச்சனை செய்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது.

31) மேலும், அ.சா.1 ஆனவர் தனது சாட்சியத்தில் மேற்படி சம்பவ சமயத்தில் பப்பிஸ் மற்றும் நவீன் ஆகியோர் தேர் பவனி வரும்போது அதற்கு இடையூறாகவும் போக்குவரத்துக்கும், பொதுமக்களுக்கம் இடையூறு ஏற்படும் வண்ணம் நடந்து கொண்டதாக கூறியுள்ளார். மேலும் அ.சா.2 மற்றும் அ.சா.3 ஆனவர்கள் இந்து முன்னனி திருப்பூர் தெற்கு மாவட்ட செயலாளர் பப்பீஸ் அவருடன் உடுமலை தெற்கு ஒன்றிய செயலாளர் நவீன் இருவரும் தகராறு செய்ததாக சொல்லியுள்ளார்கள். மேலும் அ.சா.5 ஆனவர் இந்து முன்னணி சேர்ந்த மாவட்ட செயலாளர் பப்பீஸ், தெற்கு ஒன்றிய செயலாளர் நவீன் ஆகியோர் தகராறு செய்ததாக கூறியுள்ளார். மேற்படி எதிரிகள் பொது மக்களுக்கும் போக்குவரத்திற்கும் இடையூறாக பிரச்சனை செய்ததாக சொல்லியுள்ள நிலையில் மேற்படி சாட்சிகள் அனைவரும் காவலர்கள் என்பதும்

தெரியவருகிற நிலையில் பொதுமக்களை சாட்சியாக விசாரணைக்கு உட்படுத்தி எதிரிகளின் அடையாளத்தை ஊர்ஜிதப்படுத்த அரசு தரப்பில் நடவடிக்கை எடுக்கவில்லை. மேலும் மேற்படி இந்து முன்னணியின் சார்பாக இவ்வழக்கின் எதிரிகளான இரு நபர்கள் மட்டுமே பிரசசனை செய்தார்கள் எனபது நம்பும் படியாக இல்லை.

32) மேலும் இந்து முன்னனி திருப்பூர் தெற்கு மாவட்ட செயலாளர் பப்பீஸ் அவருடன் உடுமலை தெற்கு ஒன்றிய செயலாளர் நவீன் இருவரும் என்று அரசு தரப்பு சாட்சிகள் சாட்சியம் அளித்துள்ள நிலையில் அ.சா.1 மற்றும் அ.சா.2 ஆகியோர்களின் குறுக்கு விசாரணையில் ஆஜர் எதிரி இந்து முன்னணியின் உறுப்பினராக உள்ளதை காட்ட ஆவணம் எதுவும் தாக்கல் செய்துள்ளீர்களா என்றால் இல்லை என சொல்லியுள்ளார்கள். மேலும் அ.சா.7 ஆன புலன் விசாரணை அதிகாரியும் அவரது குறுக்கு விசாரணையில் 2 ஆம் எதிரி இந்து முன்னணியில் இருப்பதற்கான ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான் என்றும், உண்மையில் 2 ஆம் எதிரி இந்து முன்னணி கட்சியில் இல்லை என்றால் அது பற்றி தெரியாது என்று கூறியுள்ளார். இந்நிலையில் 2 ஆம் எதிரியானவர் இந்துமுன்னணி கட்டியில் இருந்தார் என்பதற்கான சாட்சிய சான்றாவணங்களை முன்னிறுத்தவில்லை என்பதும் தெரியவருகிறது. எனவே இவ்வழக்கில் எதிரியின் அடையாளத்தைப் பொறுத்து அரசு தரப்பானது சந்தேகத்திற்கிடமின்றி நிரூபித்துவிட்டதாக இந்நீதிமன்றத்தால் கருத இயலாது.

33) இந்நிலையில் இவ்வழக்கு சம்பவ தினத்தன்று எதிரிகள் வாதியும் உதவி ஆய்வாளருமான சரவணகுமாரையும் மற்றும் திருவிழா பாதுகாப்பு அலுவலில் இருந்த மற்ற போலிசாரையும் பாதுகாப்பு அலுவலை செய்யவிடாமல் தடுத்ததாகவும், எதிரிகள் மேற்படி இடத்தில் வாகனங்கள் செல்ல விடாமல் வழிமறித்தும் எந்த வண்டியையும் போக விடமாட்டேன் என்று கூறி குறுக்காட்டியதாகவும் எதிரிகள் மீது வனையப்பட்ட இந்திய தண்டனைச் சட்டம் 1980, பிரிவு 353, 341 –ன் கீழான குற்றச்சாட்டைப் பொறுத்து பரிசீலிக்கையில்

அ.சா.ஆ.1 ஆன புகாரினைப் பரிசீலிக்கையில் மேற்படி எதிரிகள் தேர் இழுப்து இந்து முன்னனியில் உள்ளவர்களாகிய எங்களுக்கே முன்னுரிமை உள்ளது என்று குற்றமுறு அத்து மீறல் செய்து தேர் இழுத்து வரும் பக்தர்களிடம் தகராறு செய்தும் அதை தொடர்ந்து மீண்டும் உடுமலை – பொள்ளாச்சி ரோட்டில் மாரியம்மன் கோவில் தேர்நிலை அருகே மேற்படி நபர்கள் ஒன்று கூடி தேர் இழுத்து வருவதில் உண்டான தள்ளு முள்ளு சம்பவத்தை காரணமாக வைத்து மேற்படி ரோட்டில் பொது மக்களுக்கும் போக்குவரத்திற்கும் இடையூறாக நின்று கொண்டு வாகனங்கள் செல்ல விடாமல் வழிமறித்து எந்த வண்டியையும் போக விடமாட்டேன் எனக் கூறி மறியல் போராட்டம் நடத்தியும், உதவி ஆய்வாளராகிய என்னையும் திருவிழா பாதுகாப்பு அலுவலில் இருந்த மற்ற போலீசாரையும் பாதுகாப்பு செய்யும் அலுவலை தடுத்தும் நடந்து கொண்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

34) **முதலாவதாக** இந்திய தண்டனைச் சட்டம் 1860, பிரிவு 353–ன்படி பொது ஊழியர் சட்டப்படி தனக்குள்ள கடமையை செய்ய வரும்போது தடுக்கும் நபர்களுக்கு எதிராக எடுக்கப்படும் சட்ட நடவடிக்கை என்பதை கருத்திற் கொண்டு இவ்வழக்கை கவனத்துடன் பரிசிலீக்கையில் பிரிவு 353 என்பதன் வரையரையானது அரசு ஊழியரை அவரது கடமையை ஆற்றுவதிலிருந்து தடுப்பதற்காகத் தாக்குதல் அல்லது குற்றவியல் பலத்தைப் பயன்படுத்துதல் என்பதாகும்.

35) மேலும் இந்திய தண்டனைச் சட்டம் 1860, பிரிவு 350–ன் குற்றவியல் பலப்பிரயோகம் என்பதன் வரையரையானது

> எவரேனும் ஒரு குற்றத்தைச் செய்யும் நோக்கத்துடன், ஒரு நபரின் சம்மதம் இல்லாமல், அந்த நபரின் மீது வேண்டுமென்றே பலத்தைப் பிரயோகித்தாரோ, அல்லது அத்தகைய பலத்தைப் பயன்படுத்துவதன் மூலம், பாதிக்கப்பட்ட நபருக்குக் காயம், பயம் அல்லது தொந்தரவை ஏற்படுத்த வேண்டும் என்ற எண்ணத்துடனோ, அல்லது அவ்வாறு ஏற்படக்கூடும் என்று தெரிந்தோ பலத்தைப் பிரயோகித்தால், அவர் அந்த நபரின் மீது

குற்றவியல் பலத்தைப் பிரயோகித்ததாகக் கருதப்படுவார் என்பதேயாகும்.

36) மேலும் இந்திய தண்டனைச் சட்டம் 1860, பிரிவு 351–ன் வரையரையானது

> யாரேனும், தாம் செய்யும் சைகை அல்லது ஆயத்தம், அங்குள்ள மற்றொரு நபருக்கு எதிராகக் குற்றவியல் பலத்தைப் பயன்படுத்தப் போகிறார் என்ற அச்சத்தை அந்நபர் மீது ஏற்படுத்தும் என்ற நோக்கத்துடனோ அல்லது அவ்வாறு ஏற்பட வாய்ப்புள்ளது என்பதை அறிந்தோ, ஏதேனும் ஒரு சைகையை அல்லது ஆயத்தத்தைச் செய்தால், அவர் தாக்குதல் குற்றத்தைச் செய்ததாகக் கருதப்படுவார் என்பதேயாகும்.

37) இந்நிலையில் அ.சா.1 ஆனவர் அவரது அ.சா.ஆ.1 ஆன தணியறிக்கையில் உதவி ஆய்வாளராகிய தன்னையும் திருவிழா பாதுகாப்பு அலுவலில் இருந்த மற்ற போலீசாரையும் பாதுகாப்பு செய்யும் அலுவலை தடுத்தாக குறிப்பிடப்பட்டுள்ள நிலையில் அ.சா.1 ஆனவர் தனது முதல் விசாரணையில் மேற்படி எதிரிகள் தங்களை பணி செய்ய விடாமல் தடுத்ததாக குறிப்பிட்டு சாட்சியம் அளிக்கவில்லை. மேலும் போக்குவரத்திற்கு இடையூறு ஏற்படுத்தும் வண்ணம் பிரச்சனை செய்ததாக சொல்லியுள்ள நிலையில் எவ்வகையில் நடந்து கொண்டார் என்பது குறித்து விளக்கம் அளிக்கவில்லை.

38) இதனைப் பொறுத்து அ.சா.2 மற்றும் அ.சா.3 ஆனவர்கள் தங்களது முதல் விசாரணையில் மேற்படி சம்பவ சமயத்தில் எதிரிகள் சாலையில் அமர்ந்து வாகனங்களை விடமாட்டோம் என்று கூறி போக்குவரத்திற்கும் பொது மக்களுக்கும் இடையூறு ஏற்படுத்தி காவலர்கள் பணி செய்யவிடாமல் இடைஞ்சல் ஏற்படுத்தியதாகவும் கூறியுள்ளார். மேற்படி சாட்களும் எதிரிகள் குற்றவியல் பலப்பிரயோகம் மற்றும் தாக்குதல் செய்ததாக சாட்சியம் அளிக்கவில்லை.

39) மேலும் மேற்படி சாட்சிகளின் சங்கதிகளை நிரூபிக்க சம்பவ இடத்தில்

இருந்த பொது நபர்களை சாட்சிகளாக விசாரணைக்கு உட்படுத்தவில்லை. இது அரசு தரப்பு வழக்கிற்கு பாதகமாக உள்ளது.

40) மேலும் எதிரி தரப்பில் எதிரிகளை கைது செய்வது குறித்து கேள்விகள் கேட்கப்பட்டுள்ள நிலையில் அ.சா.2 ன் குறுக்கு விசாரணையில் மேற்படி சம்பவத்தால் போலிசார் உடனடியாக அவர்களை கைது செய்து அவர்களை அங்கிருந்து அப்புறப்படுத்துவது வழக்கம் என்றால் கைது செய்ய மாட்டோம், அப்புறப்படுத்துவோம் என்றும், குற்றத்தன்மையை பொறுத்து கைது செய்வோன் என்று கூறியுள்ள நிலையில் அ.சா.5 ன் குறுக்கு விசாணையில் சாலை மறியல் போராட்டம் நடந்தால் போலிசார் அவர்களை கைது செய்ய தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பது வழக்கம் என்றால் சரிதான் என்றும், அன்றைய தினம் எதிரிகள் போலிசாரால் கைது நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் கைது செய்ய முற்படும் போது பணி செய்ய விடாமல் தடுத்ததால் உதவி ஆய்வாளர் தனியாக புகார் கொடுத்தார் என்று கூறியுள்ள நிலையில் மேற்படி தனி அறிக்கையில் எதிரியை உதவி ஆய்வாளர் கைது செய்ய முற்படும் எதிரிகள் பணி செய்ய விடாமல் தடுத்ததாக காணப்படவில்லை. மேலும் சம்பவம் நடந்ததாக சொல்லப்பட்ட 21.04.2022 ஆம் தேதியன்று எதிரிகளை கைது செய்யவில்லை என்பதும் சுமார் 07 மாதங்கள் கழித்து 23.11.2022 ஆம் தேதியன்று கைது செய்துள்ளதும் தெரியவருகிறது. மேற்படி காலதாமதமாக கைது செய்ததற்கான காரணத்தை விளக்கப்படவில்லை.

41) இந்நிலையில் அ.சா.1 முதல் அ.சா.3, அ.சா.7 ஆனவர்கள் எதிரிகள் மறியல் போராட்டத்தில் ஈடுபட்டு போக்குவரத்திற்கும், பொதுமக்களுக்கும், பக்தர்களுக்கும் இடையூறு ஏற்படுத்தி காவலர்களை பணி செய்ய விடாமல் தடுத்தாக சொல்லியுள்ள நிலையில் அ.சா.5 ஆனவர் எதிரிகளை கைது செய்ய முற்படும் போது எதிரிகள் பணி செய்ய விடாமல் தடுத்ததாக முரண்பட்டு கூறியுள்ளார்.

42) மேலே கண்ட விவாதங்களின்படி இவ்வழக்கில் எதிரிகள் மீது

சுமத்தப்பட்ட இந்திய தண்டனைச்சட்டம் 1860, பிரிவு 353-ன் கீழான குற்றச்சாட்டைப் பொறுத்து அரசு தரப்பானது சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கவில்லை எனவும் இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது.

43) **இரண்டாவதாக** வாகனங்கள் செல்லவிடாமல் வழி மறித்து, குறுக்காட்டியதாக வனையப்பட்டுள்ள சங்கதியைப் பொறுத்து பரிசீலிக்கையில் அ.சா.1 ஆனவர் தனது முதல் விசாரணையில் தேர் பவனி வரும்போது அதற்கு இடையூறாகவும் போக்குவரத்துக்கும், பொதுமக்களுக்கம் இடையூறு ஏற்படும் வண்ணம் நடந்து கொண்டதால் மேற்படி தேர் திருவிழாவின் போது தேர் நிலைக்கு வருவதற்கு இடையூறு ஏற்படுத்தி ரகளை ஏற்படுத்தியதால் நடவடிக்கை எடுக்கக் கோரி தணியறிக்கை தாக்கல் செய்ததாகவும் கூறியுள்ளார்.

44) இது குறித்து அ.சா.1ன் குறுக்கு விசாரணையில் தணியறிக்கையில் எந்த இரு சக்கர வாகனங்களுக்கு இடையூறு ஏற்பட்டது என்பதைக் காட்ட வாகனத்தின் பதிவு எண்ணையோ, பொதுமக்களில் யாருக்கு மேற்படி எதிரி இடையூறு ஏற்படுத்தினார் என்பதைக் காட்ட அவர்கள் பெயர் முகவரியையோ தணியறிக்கையில் குறிப்பிடவில்லை என்றால் அதிகமான போக்குவரத்தும் பெரும் கூட்டம் இருந்ததால் குறிப்பிடவில்லை என்றும் பின்னிட்ட தொடர் குறுக்கு விசாரணையில் தேர் பவனி வந்து நிலைக்கு வரும் வரை அந்த வீதியில் போக்குவரத்து இருக்காது என்றால் சரிதான் என்று முரண்பட்டு கூறியுள்ளார். இந்நிலையில் அ.சா.1 ஆனவர் தனது குறுக்கு விசாரணையிலும் ஒரே விசயத்தைப் பொறுத்து இரண்டு மாறுபட்ட கூற்றுகளை கூறியுள்ள நிலையில் மாண்புமிகு உச்ச நீதிமன்ற

> "T.Subramanian Vs State of Tamilnadu reported in 2006(1) SCC 401 என்ற வழக்கில் If two views are reasonable possible on the very same evidence, it cannot be said that the prosecution has proved the case beyond reasonable doubt and if one point to guilty of the accused and another to this innocence, that view which is in favour of accused should be adopted"

என்று சுட்டிக்காட்டியுள்ள சட்ட முன் தீர்ப்பின் விளக்கத்தினையும்

இந்நீதிமன்றம் கருத்திற்கொள்கிறது. இது குறித்து அ.சா.2 மற்றும் அ.சா.3 ஆனவர்களும் மேற்படி தேர் திருவிழாவின் போது சாலை போக்குவரத்து முற்றிலும் நிறுத்தப்பட்டிருக்கும் என்றும் கூறியுள்ளார்கள். எனவே இவரது சாட்சியம் அரசு தரப்பு வழக்கிற்கு வலுவூட்டும் வகையில் அமையவில்லை என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

45) மேலும் அ.சா.2, அ.சா.3 மற்றும் அ.சா.5 ஆனவர்கள் தங்களது முதல் விசாரணையில் மேற்படி எதிரிகள் இருவரும் இந்து முன்னணியினர் தான் தேரை இழுக்க வேண்டும் என்றும் அவர்களுக்கு தான் உரிமை உள்ளது என்றும் கூறியதாகவும், அதற்கு பக்தர்களும் சத்தம்போட அங்கிருந்து சென்று விட்டதாகவும்,

46) மேலும், எதிரி தரப்பில் மேற்படி நிகழ்ச்சிகளில் போலிசார் தரப்பில் பொதுவாக வீடியோ பதிவு செய்வது வழக்கம் என்பது குறித்து கேள்விகள் கேட்கப்பட்டுள்ள நிலையில் அ.சா.1ன் குறுக்கு விசாரணையில் மேற்படி தேர் திருவிழா அன்று வீடியோ எடுக்கவில்லை என்றும், அ.சா.2 ஆனவர் போலிசார் வீடியோ பதிவு செய்தார்களா என்றால் எனக்கு தெரியாது என்றும் கூறியுள்ளார்கள்.

47) இதனைப் பொறுத்து புலன் விசாரணை அதிகாரியின் குறுக்கு விசாரணையில் எதிரிகள் குற்ற சம்பவத்தில் ஈடுபட்டதாக வீடியோ பதிவுகளை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் அந்த சம்பவ இடத்தில் பதிவு எடுக்காததால் பதிவு செய்யவில்லை என்றும், சம்பவ இடத்தில் வீடியோ எடுக்கப்படவில்லை என்றும் கூறியுள்ள நிலையில் அ.சா.5ன் குறுக்கு விசாரணையில் தேரின் முன்பும் பின்பும் தனியார் தொலைக்காட்சி சார்பாக வீடியோ எடுக்கப்பட்டது என்றால் சரிதான் என்று கூறியுள்ளார். இந்நிலையில் மேற்படி சம்பவ இடத்தில் வீடியோ பதிவுகள் எடுக்கப்பட்டது என்பது அ.சா.5 ஆனவரின் சாட்சியத்தின் மூலம் தெரியவருகிற நிலையில், மேற்படி தனியார் தொலைக்காட்சி சார்பாக பதிவு செய்யப்பட்ட வீடியோ பதிவுகளை சமர்ப்பிக்க

அரசு தரப்பில் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. இது அரசு தரப்பு வழக்கிற்கு பாதகமாக உள்ளது.

48) மேலும் மேற்படி சாட்சிகள் அனைவரும் காவலர்கள் என்பதால் தங்களது வழக்கிற்கு அனுகூலமாக சாட்சியம் அளிக்கக்கூடிய வாய்ப்புள்ள சூழ்நிலையில் இவ்வழக்கில் பொது ஜன சாட்சிகள் யாரையும் சாட்சியாக விசாரிக்கவில்லை என்பது தெரியவருகிறது.

49) ஆகையினால் மேற்படி எதிரிகள் போக்குவரத்திற்கும் இடையூறாகே மேற்படி எதிரிகள் பிரச்சனை செய்தார்கள் என்ற சங்கதியை அரசு தரப்பில் நிரூபிக்க மேற்படி சாட்சியங்களின் சாட்சியங்கள் போதுமானதாக இல்லை.

50) எனவே மேலே கண்ட விவாதங்களின் படி அ.சா.1 முதல் அ.சா.7 வரையான சாட்சியங்கள் எதிரிகளின் மீது சுமத்தப்பட்ட இந்திய தண்டனைச் சட்டம் 1980, பிரிவுகள் 354, 341–ன் கீழான குற்றச்சாட்டுகளைப் பொறுத்து அரசு தரப்பானது சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கவில்லை என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

51) முடிவாக அரசு தரப்பில் எதிரிகள் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்களான இந்திய தண்டனை சட்டம் 1860, பிரிவுகள் 353, 341–ன் கீழ் குற்றவாளிகள் அல்ல என தீர்மானித்து எதிரிகளை குற்றவியல் நடைமுறை தொகுப்பு சட்டம் 1973, பிரிவு 248(1)–ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது.

52) இவ்வழக்கில் வழக்கு சொத்துக்கள் எதுவும் கைப்பற்றப்படவில்லை என்பதால் அது பற்றி உத்தரவு பிறப்பிக்கப்படவில்லை. மேலும் இவ்வழக்கானது மேல்முறையீடு செய்யப்படும் நிலையில் மேல்முறையீட்டு நீதிமன்றத்தின் தீர்ப்பிற்கிணங்க செயல்படவும் உத்தரவிடப்படுகிறது.

**Particulars under Rule 106 of Criminal Rules of Practice 2019**

| S. No | Description of the accused | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | Cr.No | Name of the Police Station | Name | Father's Name | Occupation | Residency | Age |
| 1. | 222/2022 | Udumalpet | A1. Pappies | Baskaran | - | South District Secretary, Hindu Munnani | Charge Abated |
| 2. | 472/2022 | Udumalpet | A2. Naveenkumar @ Naveen | Murugesan | - | 74/115, Arumuga Goundder Lay Out, SS Colony, Udumalpet Tk, Tiruppur Dt. Hindu Munnani South Union, Secretary | 25/2022 |

| Date of | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| Occurrence | Complaint | Apprehension | Release on Bail | Commitment | Commencement of Trial | Close of Trial | Sentence or Order | Service of copy of Judgment on accused | Explanation of Delay |
| 21.04.2022 | 22.04.2022 | A1 – Charge Abated A2 – 23.11.2022 | A2 - Bailed by Police on 23.01.2022 | Not applicable | 24.04.2023 | 09.03.2026 | 18.03.2026 | Nil | No Delay |

இந்த தீர்ப்பானது என்னால் நேரடியாக சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்ட பின்னர், இன்று 2026–ம் ஆண்டு மார்ச் மாதம் 18 ம் நாள் என்னால் அவையறிய பகரப்பட்டது.

NITHYAKALA T
Digitally signed by NITHYAKALA T
Date: 2026.03.18 17:58:41 +0530

நீதித்துறை நடுவர் எண்.1,
உடுமலைப்பேட்டை.

**<u>இணைப்பு :–</u>**

**<u>அரசு தரப்பு சாட்சிகள் :–</u>**

அ.சா.1 24.04.2023 சரவணகுமார் (புகார்தாரர்)

| | | |
|---|---|---|
| அ.சா.2 | 23.05.2024 | சேகர் (கண்ணுற்ற சாட்சி/காவல் துறை) |
| அ.சா.3 | 23.05.2024 | கோவிந்தராஜ் (கண்ணுற்ற சாட்சி/காவல் துறை) |
| அ.சா.4 | 08.07.2024 | சம்பத்குமார் (காவல் உதவி ஆய்வாளர்) |
| அ.சா.5 | 18.02.2025 | பத்ரா (கண்ணுற்ற சாட்சி/காவல் துறை) |
| அ.சா.6 | 23.07.2025 | வேல்முருகன் (பார்வை மகசர் சாட்சி) |
| அ.சா.7 | 17.09.2025 | ராஜேஷ்கண்ணன் (புலன் விசாரணை அதிகாரி) |

**அரசு தரப்பு சான்றாவணங்கள் :–**

| | | |
|---|---|---|
| அ.சா.ஆ 1. | அ.சா.1 | தணியறிக்கை |
| அ.சா.ஆ 2. | அ.சா.4 | முதல் தகவல் அறிக்கை |
| அ.சா.ஆ 3. | அ.சா.6 | பார்வை மகசரில் உள்ள அ.சா.6 ன் கையொப்பம் |
| அ.சா.ஆ 4. | அ.சா.6 | மாதிரி வரைபடம் |
| அ.சா.ஆ 5. | அ.சா.6 | பார்வை மகசர் |
| அ.சா.ஆ 6. | அ.சா.6 | பிரேத பரிசோதனை அறிக்கை |

**எதிரிகள் தரப்பு சாட்சிகள் :– இல்லை**

**எதிரிகள் தரப்பு சான்றாவணம் :– இல்லை**

**அரசு தரப்பு சான்று பொருள் :– இல்லை**

**குறிப்பு :–**

1. எதிரி விசாரணைக்காலத்தில் பிணையிலிருந்துள்ளார்.
2. எந்த சாட்சியும் 3 வாய்தாக்களுக்கு மேல் விசாரிக்காமல் நிறுத்தி வைக்கப்படவில்லை
3. தீர்ப்பு குறித்து காவல்துறையினருக்குத் தெரிவிக்கப்பட்டது.

NITHYAKALA T

Digitally signed by NITHYAKALA T
Date: 2026.03.18 17:58:33 +0530

நீதித்துறை நடுவர் எண்.1,
உடுமலைப்பேட்டை.

நகல் பணிந்து சமர்பிக்கப்படுகிறது.
மாண்புமிகு தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர், திருப்பூர்
அவர்களுக்கு,